பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி - சென்னை-4
02-08-2025 SATURDAY 6.30 PM

வணக்கம்-மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

**1.** கடந்த 10 ஆண்டுகளில் விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு முழுவீச்சில் செயல்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. உடல் உறுப்பு தானத்தில் உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்

3. முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்துவதற்கு கேரள அரசு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு. துரைமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

**4.** தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க அஇஅதிமுக உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

**5.** அமெரிக்க சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – ராம்குமார் ராமநாதன் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>>><<<<<<

கடந்த பத்தாண்டுகளில் விவசாயிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மத்திய அரசு முழுவீச்சில் செயல்பட்டதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம், வாரணாசியில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் 20வது தவணைத் தொகையை இன்று விடுவித்துப் பேசிய அவர், விவசாயிகளின் நலனில் அரசுக்கு மிகுந்த பொறுப்பு உள்ளதாகவும், இதன் அடிப்படையிலேயே அவர்களுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் கொண்டு வரப்பட்டதாகவும் கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ், இன்றைய தினம் 9 கோடியே 70 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் 20 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

3 லட்சத்து 75 கோடி ரூபாய் இதுவரை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார்.

நாட்டில் வேளாண் உற்பத்தி குறைவாக உள்ள 100 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த மத்திய அரசு தன்தானிய யோஜனா என்னும்

*புதிய திட்டத்தை 24 ஆயிரம் கோடி ரூபாய் செலவில் கொண்டு வந்துள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.*

*இத்திட்டத்தின் கீழ், மாற்றுப் பயிர் சாகுபடியை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.*

*வறட்சி மற்றும் பருவமழை காலம் மாறுபடுவதால் ஏற்படும் சவால்களை சமாளிக்க பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், ஒரு லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*நாட்டில் உள்ள வேளாண் ஆராய்ச்சிக் கூடங்களையும், விவசாயிகளையும் இணைக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ள லட்சிய விவசாயி வாழ்வாதார திட்டத்தின் மூலம், நாட்டில் உள்ள விவசாயிகள் மிகுந்த அளவில் பயன்பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.*

*உள்ளூர் பொருட்களின் உற்பத்திக்கும், அதனை சந்தைப்படுத்துவதற்கும் தேவையான உதவிகளை அரசு செய்து வருவதாக கூறிய திரு. நரேந்திர மோடி, மக்கள் உள்ளூர் பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.*

*இதற்கிடையே. இந்த தவணைத் தொகை விடுவிக்கப்பட்டிருப்பது தங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும், உரம் மற்றும் விதைகளை வாங்குவதற்கு இந்த தொகை பயன்படும் என்றும் விருதுநகர் மாவட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.*

*(சவுண்ட் பைட் – விவசாயிகள் 43 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*நாட்டில் கடந்த ஆண்டு 18 ஆயிரத்து தொள்ளாயிரம் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் செய்து சாதனை படைக்கப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்*

*புதுதில்லியில், 15வது உடல் உறுப்பு தான தினத்தை முன்னிட்டு இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த 2023ஆம் ஆண்டில் 3 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் உடல் உறுப்பு தானத்தை செய்துள்ளதாக கூறினார்.*

*உலகிலேயே, உடல் உறுப்பு தானத்தில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.*

*மனித சமுதாயத்திற்கு உதவ வேண்டும் என்ற நற்பண்பை உடல் உறுப்பு தானம் வெளிப்படுத்துவதாகவும் அவர் கூறினார்.*

உடல் உறுப்பு தானம் செய்யும் ஒவ்வொருவரும் மற்றொருவரின் துயரத்தைப் போக்கி மறுவாழ்வு அளிக்கும் வாய்ப்பை பெறுவதாகவும் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியை ஒட்டி, உடல்உறுப்பு தானம் வழங்கியுள்ளவர்கள் மற்றும் உடல் உறுப்பு தானம் பெற்றவர்களையும் அமைச்சர் நேரில் சந்தித்தார்.

>>>>>><<<<<<

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்துவதற்கு கேரள அரசு ஒத்துழைப்பு தர வேண்டும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

வேலூர் மாவட்டம், காட்பாடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த அணையின் நீர்மட்டத்தை உயர்த்த வேண்டுமெனில், பேபி அணையை கட்ட வேண்டும் என்றும் அதற்காக கேரள எல்லைப்பகுதியில் உள்ள சில மரங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆணவக் கொலைகளை தடுக்க அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் திரு. துரைமுருகன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க அஇஅதிமுக உறுதியான முயற்சிகளை மேற்கொள்ளும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்று பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடிய அவர், தொழில் நகரமான தூத்துக்குடியில் வர்த்தக மையம் அமைப்பதற்கும், உப்பள தொழிலாளர் நல வாரியம் அமைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மாநிலத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்த காவல்துறைக்கான அதிகாரத்தை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக் கொண்டார்.

>>>>>><<<<<<

நாகை மாவட்டம், கோடியக்கரை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை இலங்கை கடல் கொள்ளையர்கள் தாக்கியதில் 3 பேர் காயமடைந்தனர்.

*அவர்களிடமிருந்து மீன்பிடி வலை உள்ளிட்டவற்றை கொள்ளையர்கள் அபகரித்துச் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட் – செல்வன் ஜெபராஜ் 44 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த நான்கு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நீலகிரி, திருச்சி. தஞ்சாவூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட் – செந்தாமரை 46 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

*மாவட்டச் செய்திகள்*

*ஈரோடு மாவட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட பால் கூட்டுறவு சங்கத்திற்கு, நலத்திட்ட உதவிகள் மற்றும் உபகரணங்களை மாநில அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் இன்று வழங்கினார்.*

*>>>>>><<<<<<*

*கன்னியாகுமரி மாவட்டம். வைத்தியநாதபுரம் பகுதியில், மூத்த குடிமக்களுக்கு வீடு தேடி ரேஷன் பொருள் வழங்கும் திட்டத்தின் முன்னோட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி. அழகு மீனா இன்று ஆய்வு செய்தார்.*

*>>>>>><<<<<<*

*நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் வல்வில் ஓரி விழா இன்று நடைபெற்றது.*

*>>>>>><<<<<<*

*சென்னை நேப்பியர் பாலம் அருகே தூர்வாரும் பணிகளை மாநில நீர்வளத்துறை செயலர் திரு. ஜெயகாந்தன் இன்று ஆய்வு செய்தார்.*

*>>>>>><<<<<<*

*விளையாட்டுச் செய்திகள்*

*அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – ராம்குமார் ராமநாதன் இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 4-6, 10-3 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் பிரணவ் குமார் – ஆஸ்திரேலியாவின் Kody Pearson இணையை வென்றது.*

*>>>>>><<<<<<*

*இங்கிலாந்துக்கு எதிரான 5வது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று இந்தியா, இரண்டாவது இன்னிங்ஸில் சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்புக்கு 190 ரன் எடுத்துள்ளது.*

*லண்டனில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இந்தியா முதல் இன்னிங்ஸில் 224 ரன் எடுத்துள்ளது.*

*இங்கிலாந்து முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 247 ரன்.*

*>>>>>><<<<<<*

*பிரேசில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனிக்கா பத்ரா காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

***>>>>>>END<<<<<<***